செ.வெ.எண்: 41/2008 நாள்: 16.02.2008

**திண்டுக்கல் மாவட்டம் சிறுமலை ஊராட்சி தென்மலை கிராமத்தில் மரபுசாரா எரிசக்தி திட்டத்தின் மூலம் மின்சாரம் வழங்குதல் - மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. இரா.வாசுகி, இ.ஆ.ப. அவர்கள் துவக்கி வைத்தார்.**

திண்டுக்கல் மாவட்டம் சிறுமலை ஊராட்சி தென்மலை கிராமத்தில் மரபுசாரா எரிசக்தி திட்டத்தின் மூலம் மின்சாரம் வழங்கும் திட்ட துவக்க விழா நடைபெற்றது. விழாவிற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.இரா.வாசுகி, இ.ஆ.ப. அவர்கள் தலைமை வகித்து திட்டத்தை தொடங்கி வைத்து பேசியதாவது.

தொலைதூர குக்கிராமங்களுக்கு மின்சாரம் வழங்கும் திட்டத்தை மரபுசாரா எரிசக்தி அமைச்சகம் செயல்படுத்தி வருகிறது. புதுப்பிக்கத்தக்க சக்தியான சூரியஒளி மூலம் மின்சாரம் தயாரித்தல், இயற்கை வாயு மூலம் மின்சாரம் தயாரித்தல் போன்றவை மூலம் கிராமங்களுக்கு மின்சாரம் வழங்கலாம். வனத்துறையின் சார்பில் மரபுசாரா எரிசக்தி மூலம் மின்சாரம் வழங்குவதற்காக தென்மலை கிராமம் தேர்வு செய்யப்பட்டு அந்த திட்டத்தை இன்று தொடங்கி வைப்பதில் நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். மின்சாரம் தயாரித்து முதற்கட்டமாக 62 வீடுகளுக்கும், 16 தெரு விளக்குகளுக்கும் மின்சாரம் வழங்கப்படும். பிறகு படிப்படியாக தென் மலையிலுள்ள 200 வீடுகளுக்கும் மின் இணைப்பு வழங்கப்படும். இதற்காக ரூ.26.69 லட்சம் செலவிடப்பட்டுள்ளது. 20 கே.வி. ஜெனரேட்டர் மற்றும் 1 ஆயில் எக்ஸ்பெல்லர் வாங்கப்பட்டு இதனை புங்கன் எண்ணெய்யில் இயக்கி மின்சாரம் தயார் செய்யப்படுகிறது. அவ்வாறு தயார் செய்யப்பட்ட மின்சாரம் கிராம பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படுகிறது. புங்கன் ஆயில் கிடைத்திட வேண்டும் என்பதற்காக 20 ஹெ. பரப்பில் 10,000 செடிகள் கொண்ட புங்கன் தோட்டம் அமைக்கப்பட்டுள்ளது. புங்கன் விதைகளை ஆயில் எக்ஸ்பெல்லர் இயந்திரத்தின் மூலம் எண்ணெய் எடுத்து 20 கே.வி. ஜெனரேட்டரை இயக்கி அதன் மூலம் மின்சாரம் தயாரித்து பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படுகிறது.

இதுபோன்ற திட்டங்கள் நல்ல முறையில் செயல்பட தென்மலை கிராமத்தில் உள்ளூர் மக்கள் 106 நபரை உறுப்பினராக கொண்டு இந்த மாவட்டத்திற்கு ஒரு முன் உதாரணமாக கிராம எரிசக்தி குழு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவில் ஊராட்சி மன்றத் தலைவர், வனச்சரகர், மற்றும் கிராமத்தில் உள்ள நபர்கள் உறுப்பினர்களாக இருப்பார்கள். இத்திட்டத்தின் மூலம் கிராம எரிசக்தி பாதுகாப்பு குழு தீர்மானத்தின்படி 62 வீடுகளுக்கு மேம்படுத்தப்பட்ட அடுப்பும் பொருத்தப்பட்டுள்ளது. சிறுமலையிலிருந்து தென்மலை வரை உள்ள சாலைகள் மிகவும் பழுதுபட்டுள்ளது. அதை சீரமைப்பதற்காக ஊராட்சி நிதியிலிருந்து ரூ.40 லட்சமும், தேவையான பிற நிதிகளை மற்ற திட்டங்களின் மூலம் மேற்கொண்டு விரைவில் இந்த சாலை சீரமைத்து தரப்படும். சிறுமலைப் பகுதியில் குடிநீர் வசதி, மின்சார வசதி செய்யப்பட்டுள்ளது. மேலும் தேவைப்பட்டால் அதற்கான நடவடிக்கை விரைவில் மேற்கொள்ளப்படும். இப்பகுதியில் குடும்ப அட்டைகள் கேட்டு மனுக்கள் அளித்துள்ளீர்கள். இரண்டு வார காலத்திற்குள் குடும்ப அட்டைகள் வழங்கப்படும்.

தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் ரூ.5 லட்சம் செலவில் ஊரணி ஒன்று அமைக்கப்படும். வனத்துறையின் மூலமாக மலைப் பகுதியிலே உள்ள மலைவாழ் மக்களுக்கு தேவையான உதவிகள் செய்யப்பட்டு வருகின்றன. கடந்த ஆண்டு வனக்குழு மற்றும் வனத்தை நம்பி வாழ்கின்ற மக்களுக்காக திட்டமிடப்பட்ட பணிகளில் 60% பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளது. அதேபோன்று நடப்பாண்டும் வனத்துறையின் மூலம் பணிகள் மேற்கொள்ள திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. எந்தவொரு திட்டமாக இருந்தாலும் அதை பயன்படுத்துகின்ற மக்கள் நல்ல முறையிலே பயன்படுத்தினால் தான் வெற்றி பெறும் என்பதால் மரபுசாரா எரிசக்தி மூலம் இந்த தென்மலை கிராமத்திற்கு வழங்கப்பட்டுள்ள மின்சாரத்தினை பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் திரு.சி.கே.ஸ்ரீதரன் அவர்கள் பேசியதாவது.

இந்திய அளவில் மரபுசாரா எரிசக்தி மூலம் மின்சாரம் வழங்கும் திட்டம் தமிழகத்தில் தான் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. தர்மபுரி, கிருஷ்ணகிரி, திண்டுக்கல் ஆகிய 3 மாவட்டங்களில் தான் இந்த திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. மரபுசாரா எரிசக்தி மூலம் மின்சாரம் பெற்றால் 10 ஆண்டுகள் அது பயன்பாட்டில் இருக்கும். இந்த திட்டம் தமிழகத்தில் மேலும் 3 இடங்களில் அமைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. வனத்துறை மக்களோடு இணைந்து பல்வேறு பணிகள் செய்து வருகிறது. குறிப்பாக சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்காக இணைந்து செயல்படுவது, மக்களோடு இணைந்து மலைவாழ் மக்களுக்கு பல்வேறு உதவிகளை வழங்குவது ஆகியவை வனத்துறையின் தலையாய கடமையாகிறுது. திண்டுக்கல் மாவட்டத்தைப் பொறுத்த வரை வனத்துறை பல்வேறு துறைகளோடு இணைந்து நலத்திட்ட உதவிகளை செயல்படுத்தி வருவது மிகவும் பாராட்டுக்குரியது எனத் தெரிவித்தார்.

இவ்விழாவில் தலைமை வனப்பாதுகாவலர் முனைவர். என்.கிருஷ்ணகுமார், இ.வ.ப., மாவட்ட வன அலுவலர் திரு.கே.கந்தசாமி, சிறுமலை ஊராட்சி தலைவர் திரு.துரைசாமி பூபதி உட்பட வனச்சரகர்கள் மற்றும் வன அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இதனைத் தொடர்ந்து ரூ.3.37 லட்சம் மதிப்பில் புதுப்பிக்கப்பட்ட சிறுமலை ஊராட்சி மன்ற அலுவலகத்தை மாவட்ட ஆட்சியர் துவக்கி வைத்தார். மேலும் தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் ரூ.5 லட்சம் மதிப்பில் ஊரணி அமைக்கும் பணியையும் மாவட்ட ஆட்சியர் பார்வையிட்டார்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,<br>திண்டுக்கல் மாவட்டம்.